வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 13.05.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 134 | பக்கங்கள் : 12

# போரில் கொல்லப்பட்ட மக்களுக்காக முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி!

## நினைவேந்தல் குழு அறிவிப்பு



முள்ளிவாய்க்கால், மே 13

**இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையில் முள்ளி வாய்க்கால் மண்ணில் நினைவுத்தூபி அமைப்பதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வட, கிழக்கு பொதுக் கட்டமைப்பின் இணைத்தலைவர் அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்தார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசும் போரிலே இறந்த அனைவருக்குமாக பொது நினைவுத் தூபி ஒன்றை அமைக்க திட்டமிடுகிறார்கள். அது எங்களுடைய இன அழிப்பை இல்லாமல் போக செய்கின்ற ஒரு முயற்சியாக இருக்கிறது. முள்ளிவாய்க்காலில் நாம் அமைக்கவுள்ள நினைவுத் தூபி நாங்கள் இனமாக அழிக்கப் பட்டோம் என்பதை உரத்துக் கூறுகின்றதாக இருக்கும்.

அரசாங்கம் தங்களுடைய அதிகாரத்தை பயன் படுத்தி எதை செய்ய முனைந்தாலும் நாங்கள் எங்களுடைய உணர்வுகளின் அடித்தளத்திலே இந்த இடத்திலே நிறுவுகின்ற நினைவுத்தூபி காலாகாலமாக நாங்கள் அழிக்கப்பட்டோம், சிங்கள - பௌத்த பேரினவாதத்தால் தமிழ் மக்களான நாங்கள் வகைதொகையின்றி கொல்லப் பட்டோம் என்று உரத்துக் கூறுவதாக அமையும்.

கனடாவில் பிரம்டன்

11

## ஊசி மூலம் ஹெரோயினை செலுத்தியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 13

ஹெரோயின் போதைப்பொருளை ஊசி மூலம் உடலில் செலுத்திய இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

தென்மராட்சி - மட்டுவிலை சேர்ந்த 27 வய தான, ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபரை காணவில்லை என்று அவரின் உறவினர்கள் தேடியுள்ளனர். இந்த நிலையில், அவரின் தாயாரின் வீட்டின் பின்புறம் சடலமாக

11

யாழ். பல்கலை. மாணவரின் ஏற்பாட்டில்

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் வல்வெட்டித்துறையில் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் படுகொலை வாரத்தை நினைவு கூரும் விதமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை

11

## ரூ. 46 கோடி பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது!

கொழும்பு, மே 13

நாட்டின் விமான நிலைய சுங்கத்தின் வரலாற்றில் மிகப்பெரிய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. 46 கோடி ரூபா பெறுமதியான குஷ் ரக போதைப்பொருளுடன் பிரிட்டன் பெண்

11

## ஆட்சி அமைப்பதற்காக எவரையும் விலைக்கு வாங்கப்போவதில்லை!

தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மே 13

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி சிறப்புரிமைகளையோ, பணத்தையோ வழங்கி எவரையும் விலைக்கு வாங்கப் போவதில்லை என்பதைப் பொறுப்புடன் கூறிக்கொள்கிறேன். உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் மோசமான பழைய முறைமையை எமது அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றாது - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர்

11

## உள்ளூராட்சிகளில் கட்சி சார்பற்ற ஆட்சிக்காக இணைய வேண்டும்!

எதிர்க்கட்சிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு

கொழும்பு, மே 13

அனைத்து அரசியல் கட்சிகளையும் திருடர்கள் எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்திக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்களில் கட்சி சார்பற்ற ஆட்சியமைக்க அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அழைப்பு விடுத்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே இதனை அவர் தெரிவித்தார்.

11




## தையிட்டி விகாரை முன்பாக நேற்றும் மக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 13

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்ற வேண்டும் என்று கோரி சித்திரா பௌர்ணமி (வெசாக்) தினமான நேற்றும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களின் அழைப்பின்பேரில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்

11

## முதல் மாவீரர் சங்கரின் தந்தை காலமானார்!



யாழ்ப்பாணம், மே 13

தமிழீழ விடுதலை புலிகளின் முதல் மாவீரரான லெப். சங்கரின் தந்தையாரான செல்வ சந்திரன் நேற்று திங்கட்கிழமை காலமானார்.

வடமராட்சி - கம்பர்மலையைச் சேர்ந்த அவர் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவராவார்.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் முதல்

11

கொத்மலை பேருந்து விபத்து:

## காயமடைந்தவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடம்!

நுவரெலியா, மே 13

நுவரெலியாவில் 100 அடி பள்ளத்தில் விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக உயர்ந்தது. இந்த நிலையில், காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கொத்மலை - இறம்பொடை - கெரண்டி எல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை

11

## சுற்றுலா வந்த பேருந்துமீது வேலணையில் தாக்குதல்!

இருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 19

தென்னிலங்கையிலிருந்து சுற்றுலா வந்த பேருந்து மீது வேலணையில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று திங்கட்கிழமை இரவு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த மூவரே

11

# 1996இல் தப்பிய வீடுகள் பின்னரே இடித்து தரைமட்டமாக்கப்பட்டன

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்



யாழ்ப்பாணம், மே 13

1996ஆம் ஆண்டு மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வீடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்ததை நான் நேரடியாகக் கண்டிருந்தேன்.

2015 மாவட்ட செயலராக யாழ். மாவட்டத்துக்கு நான் வந்த பின்னர் மயிலிட்டியை வந்து பார்வையிட்டபோது அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருந்தது. நல்ல நிலையிலிருந்த வீடுகள் பலவும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய சனசமூக நிலையத்துடன் இணைந்த கல்வி நிலைய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக நான் கடமையாற்றியிருக்கிறேன். 1996ஆம் ஆண்டு நாம் இங்கு வந்தபோது இடம்பெயராமல் தங்கியிருந்த தையிட்டி மக்கள் சிலரை இராணுவத்தினருடன் வந்து நான் பார்வையிட்டிருந்தேன். அப்போது மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வீடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்ததை நான் நேரடியாகக் கண்டிருந்தேன்.

2015 மாவட்ட செயலராக யாழ். மாவட்டத்துக்கு நான் வந்த பின்னர் மயிலிட்டியை வந்து பார்வையிட்டபோது அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருந்தது. நல்ல நிலையிலிருந்த வீடுகள் பலவும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன.

2015ஆம் ஆண்டு மாவட்ட செயலராக நான் வரும்போது மாவிட்டபுரம் சந்தி வரையிலேயே முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் படிப்படியாக இங்கே மீள்குடியேற்றம் நடைபெற்றது. அன்றைய காலத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா, தர்சன ஹெட்டியாராச்சி ஆகியோர் மீள்குடியமர்வு செயல்பாட்டுக்கு முழுமையாக ஒத்துழைத்திருந்தார்கள். அவர்கள் இன்னும் சில காலம் இருந்திருந்தால் மேலும் பல காணிகளை எம்மால் விடுவித்திருக்க முடியும்.

காணிகளை விடுவிக்கும்போது மகேஷ் சேனநாயக்க சொல்வார், நீங்கள் அடுத்த வாரமும் எங்களிடம் வருவீர்கள். அடுத்த காணிகளை விடுவிக்கக் கோருவீர்கள் என்று நகைச்சுவையாகச் சொல்வார். அப்படித்தான் இந்தக் காணி விடுவிப்புகளைச் செய்தோம்.

தற்போது இங்கு வரும்போது இந்தப் பகுதிகளைப் பார்வையிடும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. வீடுகளை அமைத்து கட்டடங்களை அமைத்து முன்னேறியிருக்கின்றீர்கள். உங்கள் கிராமத்தை வளர்ச்சியடையச் செய்திருக்கிறீர்கள் - என்றார். (ஐ)



# மாங்குளத்தில் இரத்தான முகாம் 75 கொடையாளர்கள் பங்கேற்பு!

முல்லைத்தீவு, மே 13

விதையனைத்தும் விருட்சமே, 'டாஸ்' அமைப்புகள் இணைந்து மாங்குளத்தில் இரத்த தான முகாமை நடத்தினர்.

மாங்குளத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இந்த இரத்த தான முகாமில் சுமார் 75 கொடையாளர்கள் இரத்ததான செய்தனர். இது விதையனைத்தும் விருட்சமே செயல்திட்டத்தின் 45வது விசேட இரத்ததான முகாமாகும்.

விதையனைத்தும் விருட்சமே நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக இதுவரை 2 ஆயிரத்து 227 கொடையாளர்கள் இரத்த தானம் செய்துள்ளனர்.

இந்த இரத்த தான முகாமில் யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கியின் மருத்துவர் எஸ். சண்முகப்பிரியா, பொது சுகாதார பரிசோதகர்கள் ரி ரவீனதாஸ், ஜே. சாரங்கன், தாதியர்கள் அச்சுதானந்தன், ஐங்கரன் ஆகியோர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (ஐ)

# கலைவாணி சனசமூக நிலையம், உப தபால் நிலையம் திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 13

குப்பிழானில் கலைவாணி சனசமூக நிலையம், உப தபால் நிலையம் என்பவற்றின் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு குப்பிழான் தெற்கில் (குப்பிழான் விவசாய சம்மேளனம் அருகில்) நடைபெறவுள்ளது.

ஆசிரியர் க. கமலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ்ப்பாண பிரதி அஞ்சல் மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ்ப்பாண பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஏ. டி. பெர்னாண்டோ, வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பா. ஜெயகரன், வலி. தெற்கு பிரதேசசபையின் செயலாளர் அழகேசன் பிரதீபன், சுன்னாகம் தபாலதிபர் திருமதி கவிதா சிவகுமாரன், வலி. தெற்கு பிரதேச சபையின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சர்மிளா மயூரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா, கஜதீபன், குப்பிழான் தெற்கு கிராம அலுவலர் செல்வி பிரதீபா சுதாகரன், குப்பிழான் வடக்கு கிராம அலுவலர் இரத்தினேஸ்வரன் ரமேஷ் ஆகியோர் விருந்தினர்களாக பங்கேற்கவுள்ளனர். (ஐ)

# ரூ. 8.7 கோடி பெறுமதியான கஞ்சா மன்னாரில் சிக்கியது!



மன்னார், மே 13

8.7 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சாவை கடற்படையினர் மன்னார் பேசாலை கடற்கரையில் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே 218 கிலோ 800 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அத்துடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கண்ணாடி இழை படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கடற்படையின் கண்காணிப்பு காரணமாக படகிலேயே கஞ்சா பொதிகளை கடத்தல்காரர்கள் விட்டுச் சென்றிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் படகும் சட்ட நடவடிக்கைக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# யாழ். சர்வதேச விமான நிலையத்தில் வெசாக்!



யாழ்ப்பாணம், மே 13

வெசாக் தினமான நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

விமான நிலைய பணியாளர்களின் ஏற்பாட்டில் வெளிச்சக்கூடுகளினால் விமான நிலையம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அத்துடன், விமான பயணிகளுக்கு சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. (ஐ)

# வீதியால் பயணித்தோருக்கு பொலிஸாரால் தாக சாந்தி!



யாழ்ப்பாணம், மே 12

வெசாக் பண்டிகையை முன்னிட்டு வட்டுக்கோட்டை பொலிஸார் வீதியால் பயணித்தவர்களுக்கு பாயசம் வழங்கினர்.

பௌத்த மக்களின் முக்கிய பண்டிகையான வெசாக் தினமான நேற்று திங்கட்கிழமை இந்த தானம் இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கொஸ்தா தலைமையில் இந்த தானம் வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ஐ-05)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.05.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 30

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உள்ளூராட்சி சபைகளில் இணைதல்

உள்ளூராட்சி சபைகளை ஆட்சி செய்வதற்காக ஏனைய கட்சிகளுடன் கூட்டுச்சேர வேண்டிய நிர்ப்பந்தம் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் உண்டு. இதில், அதிக இடங்களை கைப்பற்றியவர்கள், குறைவான இடங்களை கைப்பற்றியவர்கள் என்னும் வேறுபாடு இல்லை. இலங்கை தமிழ் அரசு கட்சியே வடக்கு - கிழக்கில் பெரும்பாலான சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான அதிக இடங்களை வைத்திருக்கிறது.

ஆனாலும், பெரும்பாலான சபைகளில் ஆட்சிமைக்க வேண்டுமாயின், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்தால் மட்டுமே அது சாத்தியப்படும். வடக்கு - கிழக்கிலுள்ள சபைகள் அனைத்தையும் தமிழ்க் கட்சிகள் கைப்பற்ற வேண்டும் என்பதே அனைத்துத் தமிழ் கட்சிகளினதும் தேர்தல் நிலைப்பாடாக இருந்தது. இப்போதும், அவர்களின் நிலைப்பாடு அதுதான் என்றால் இணைவதில் எந்தவொரு கொள்கைசார் பிரச்னைகளும் இல்லை.

தமிழ்த் தேசியவாத கட்சிகளாக தங்களை முன்னிறுத்திய அனைத்து கட்சிகளுமே வழமைக்கு மாறாக உள்ளூராட்சித் தேர்தலை தமிழ்த் தேசியவாத அரசியல் மேடையாகவே பயன்படுத்தியிருந்தன. தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியே இதற்கான ஒரேயொரு காரணமாக இருந்தது. தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து மீண்டும் தவறிழைத்து விடாதீர்கள் என்பதே தமிழ்த் தேசியவாத கட்சிகளின் பிரதான கோஷமாக இருந்தது.

தேர்தல் முடிவுகளின்படி தேசிய மக்கள் சக்தியை வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் நிராகரித்திருக்கின்றனர் என்றும் தமிழ் மக்கள் மீண்டும் தேசமாகத் திரண்டு விட்டனர் எனவும் பிரசாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், இது உண்மைக்கு மாறானது. ஏனெனில், தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரையில் அவர்கள், தேசிய அளவில் பிரதான கட்சியாகவும் வடக்கு - கிழக்கில் இரண்டாம் நிலைக் கட்சியாகவும் இருக்கின்றனர். ஒரு தென்னிலங்கை கட்சி வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் இரண்டாம் நிலையில் இருக்கிறது என்றால் தமிழ் மக்கள் தேசமாக திரண்டு தேசிய மக்கள் சக்தியை நிராகரித்திருப்பதான வாதம் சிறுபிள்ளைத்தனமானது.

எனவே, தமிழ்த் தேசியவாத அரசியலை முன்னெடுப்பதாகக் கூறிக் கொள்ளும் கட்சிகள் அனைத்தும் முதலில் இந்த விடயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அத்துடன், நிபந்தனையின்றி, தங்களை உள்ளூராட்சி சபைகளில் ஓரணியாக்கிக் கொள்ள வேண்டும். அத்தோடு, வினைத்திறனான உள்ளூராட்சி நிர்வாகம் ஒன்றை செயலில் காண்பிக்க வேண்டும். கடந்த காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் முட்டிக் கொண்டது போன்ற தவறுகள் இனியும் இடம்பெறாத வகையில் விடயங்களை புத்திசாதுர்யமாகவும் நிதானமாகவும் தூரநோக்குடனும் அணுக வேண்டும்.

வடக்கு, கிழக்கு முழுவதும் ஒரேமாதிரியான அணுகுமுறையை கைக்கொள்ள வேண்டும். இதேபோன்று, பரஸ்பர விட்டுக்கொடுப்புகளுடன் விடயங்களை கையாளும் முதிர்ச்சியை தமிழ் கட்சிகள் நிரூபிக்க வேண்டும். கடந்த காலத்தில் அவ்வாறான முதிர்ச்சியான அணுகுமுறையை நிரூபிப்பதில் தமிழ் கட்சிகள் வெற்றிபெறவில்லை.

ஆனால், முயன்றால் உள்ளூராட்சி சபைகளில் இணைந்து செயல்படுவது ஒரு விடயமேயல்ல. ஆனால், அதற்கொரு நிபந்தனையுண்டு. அதாவது, கட்சித் தலைவர்கள் என்போர் தங்களின் எதிர்கால தேர்தல் வெற்றிகளை கருத்தில் கொண்டு - சுயநலமாக சிந்திக்காமல் - தமிழ் மக்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு சிந்தித்தால் - உள்ளூராட்சி சபைகளை அனைவருமாக இணைந்து திறம்பட ஆட்சி செய்ய முடியும். உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் வெற்றி பெற்றிருப்பதால் கடந்த எழுபத்தைந்து வருடங்களாக ஈழத் தமிழர் அரசியலில் நிகழாத எந்தவோர் அதிசயமும் திடீரென்று நிகழ்ந்துவிடப் போவதில்லை.





## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்காலில் சிரமதானம்

முள்ளிவாய்க்கால், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் மக்களோடு இணைந்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. (எ)

## சமாதானத்துக்கான இளைஞர் பேரவையால் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அவசர கடிதம்

யாழ்ப்பாணம், மே 13

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பது தொடர்பான சட்டங்கள் கடுமையானதாக மாற்றப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்ட தன்னார்வ இளைஞர் அமைப்பு - சமாதானத்துக்கான இளைஞர் பேரவையால் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் தமிழ் மாணவி டில்ஷி அம்ஷிகாவுக்கு எதிராக நிகழ்ந்த வன்கொடுமைக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பது தொடர்பான சட்டங்கள் கடுமையானதாக மாற்றப்பட வேண்டும் எனவும் குறித்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-05)

## யாழில் 20 கைதிகள் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், மே 13

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 20 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் நேற்று 388 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இதன்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த 20 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் டி. ஐ. ஜெயவர்த்தன உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் கைலாகு கொடுத்து கைதிகளை வழியனுப்பி வைத்தனர். (எ)

## நாவாந்துறையில் விளையாட்டு போட்டிகள்



யாழ்ப்பாணம், மே 13

நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

கடந்த 10 ஆம் திகதி சைக்கிள் ஓட்டப் போட்டியும் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெற்றன. நேற்று முன்தினம் ஏனைய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் பிரதம விருந்தினராகவும், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மலர்மகள் தயாபரன் சிறப்பு விருந்தினராகவும், ஜே - 54 கிராம உத்தியோகத்தர் எஸ். ரமணன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

விளையாட்டுப் போட்டிகள் நிறைவடைந்த பின்னர் பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






மே - 13 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை30
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : பிரதமை

**மேடம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வாகனவசதிப் பெருகும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**மிதுனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. அனாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆதரவு கிடைக்கும். வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். புதியசலுகைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். விருந்தினரின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் ஆதாயம் உண்டு. வேற்றுமதத்தவர் அறிமுகமாவார்கள்.

**கன்னி**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். மற்றவர்களுக்காக பரிந்து பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளைபோராடி விற்பீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகளிடம் எதிர்மறையாகப் பேச வேண்டாம். எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாகுவீர்கள். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள்கரையும்.

**தனுசு**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்டஉதவியை செய்வீர்கள். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு உயரும். விசேஷங் களை முன்னின்று நடத்துவீர்கள்.

**மகரம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பிரபலங்கள் உதவுவார்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிரச்னைகளுக்கு எதார்த்த மாக முடிவு எடுப்பீர்கள். சுப நிகழ்ச்சி களில் கலந்துக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக்கூடும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச் சுமை இருக்கும். குடும்பத்தில் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு பார்க்கவேண்டி இருக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

# மாணவனை தாக்கிய ஆசிரியருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 13

மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை சித்தங்கேணிப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனமொன்றில் வகுப்புக்கு வருகைதரும் மாண வன் ஒருவர் "பட்டப் பெயர்" கூறி அழைத்ததாகத் தெரிவித்து மாணவனை ஆசிரியர் வகுப்பு வேளையில் அடித்துத் தாக்கி யுள்ளார்.

இந்த நிலையில் மாணவனின் பெற்றோர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய ஆசிரியர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது கைது செய்யப்பட்ட தனியார் கல்வி நிலைய ஆசிரியரை இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ)

# இளங்கோ அடிகளின் நினைவு நாள் வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு





வவுனியா, மே 13

தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சித்திரை முழுநிலா நாளில் நினைவுகூரப்படுகின்றார்.

அந்த வகையில் வவுனியா சின்னப்புதுக்குளம், சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோ அடிகளின் திருவுருவச் சிலைக்கருகிலும் நேற்றுக் காலை நினைவுதின நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, இளங்கோ அடிகளின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சிறப்புரைகளும் நடைபெற்றன.

வவுனியா மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நகர சபை உத்தியோகத்தர்கள், தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# வவுனியா சிறைச்சாலையிலிருந்து ஏழு கைதிகள் நேற்று விடுதலை



வவுனியா, மே 13

வெசாக் தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் வவுனியா சிறைச்சாலையிலிருந்து நேற்று 7 கைதிகள் விடுதலை செய்யபபட்டனர்.

நாடளாவிய ரீதியில் 388 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வெசாக் தினத்தை முன்னிட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இதனடிப்படையில் வவுனியா சிறைச்சாலையிலும் சிறு குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்கள் ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டனர். வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் எச். மதுசங்க தலைமையில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். (எ-10)

# எதிர்காலச் செயல்பாடுகள் தொடர்பில் தமிழ் தேசிய பேரவை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்த் தேசிய பேரவையின் உறுப்பினர்களுக்கும் அதன் தலைமைகளுக்கும்இடையி லான யாழ். மாவட்ட சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் உள்ள வை. எம். சி. மண்டபத்தில் தமிழ்த் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, தமிழ்த் தேசிய பேரவையின் தேர்தல் கால சவால்கள், எதிர்காலச் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா, செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஜனநாயக தமிழரசு கட்சியின் உப செயலாளர் நாவலன், தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

கொழும்பு மாநகர சபை ஆட்சி:

# இணைந்த எதிர்க்கட்சிகளின் முக்கிய சந்திப்பு இந்த வாரம்!

கொழும்பு, மே 13

**கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகளின் கலந்துரையாடல் இந்த வாரம் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு அரச தரப்புக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவு கிறது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் ஆளும் கட்சி 48 ஆசனங்களை பெற்று முன்னிலை வகிக்கிறது. இதேநேரம், எதிர்க்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து 69 ஆச னங்களை பெற்றுள்ளன.

தேசிய மக்கள் சக்தி தனிக் கட்சியாக அதிக இடங்களில் வெற்றி பெற்றிருந்தாலும் எனி னும், ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையை பெறவில்லை. எனவே, தனித்து ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைக்க வியூ கம் அமைத்து வருகின்றன. இதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய சுயேச்சை குழுக்களுடன் கடந்த வாரம் நடத்திய பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந் துள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரி வித்துள்ளார்.

இதற்கமைய, முக்கிய கலந் துரையாடல் ஒன்று இந்த வாரம் நடைபெறும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் கொழும்பு மாநகர ஆட்சி அமைப்பது தொடர்பில் இறுதி செய்யப்ப டும் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (ஐ)

# ஐடா ஸ்டெல்லா சொகுசு கப்பல் கொழும்பு வந்தது




கொழும்பு, மே 13

ஐடா ஸ்டெல்லா சொகுசு பயணிகள் கப்பல் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்த டைந்தது.

மலேசியாவிலிருந்து 2,022 சுற்றுலா பயணிகள் மற்றும் 628 பணியாளர்களுடன் இந்தக் கப் பல் வந்ததாக தெரிவிக்கப்பட் டுள்ளது. நேற்றுமுன்தினம் அம்பாந்தோட்டை துறைமு கத்தை வந்தடைந்த இந்தக் கப்பல் நேற்று கொழும்பு துறை முகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பல் மூலமாக அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா மற்றும் பெல்ஜியம் உள் ளிட்ட 30 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர் என்று தெரி விக்கப்பட்டது. (ஐ)

# போதைப்பொருட்களுடன் 360 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மே 13

நாடளாவிய ரீதியில் பொலிஸார் நேற்று முன்தினம் நடத்திய சுற்றிவளைப்பில் போதைப்பொருட்களுடன் 360 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயினு டன் 114 பேரும் ஐஸ் போதைப் பொருளுடன் 141 பேரும் கஞ் சாவுடன் 100 பேரும், கஞ்சா செடிகளுடன் 5 பேரும் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 204 கிராம் 696 மில்லிகிராம் ஹெரோயின், 162 கிராம் 130 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 6 கிலோ 933 கிராம் 474 மில்லிகிராம் கஞ்சா, 31 ஆயிரத்து 454 கஞ்சா செடிக ளும் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது. (ஐ)

# பாராளுமன்ற அதிகாரிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடும் குறைப்பு!

கொழும்பு, மே 13

பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட பாராளு மன்ற நிர்வாக அதிகாரிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை குறைத்து விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரை செய லாளர் நாயகத்துக்கு வரம்பற்ற எரிபொருள் வழங்கப்பட்ட நிலையில் இனிவரும் காலங்க ளில் மாதத்துக்கு 220 லீற்றர் எரிபொருள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,

பிரதி செயலாளர் பெறும் எரிபொருளின் அளவும் மாதத்துக்கு 165 லீற்றராகக் குறைக்கப்பட்டுள்ளது. உதவி செயலாளர் நாயகம் மற்றும் துறைத் தலைவர்கள் பெறும் எரிபொருளின் அளவு மாதத் துக்கு 135 லீற்றராகவும், செயலா ளர் நாயகத்தின் ஒருங்கிணைப்பு செயலாளர் பெறும் எரிபொரு ளின் அளவை மாதத்துக்கு 115 லீற்றராகவும் குறைக்கப்பட் டுள்ளது. கடந்த 7 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த சுற்ற றிக்கையின்படி, எரிபொருள் கட்டுப்பாடுகள் 02 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது.

பாராளுமன்ற அதிகாரிகள் கடந்த காலங்களில் அதிகமாக எரிபொருளை பயன்படுத்தினர் என்று வெளியான தகவல்க ளையடுத்து இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மகனை காப்பாற்றிய தந்தை நீரில் மூழ்கி பலி

கொழும்பு, மே 13

நீரில் மூழ்கிய மகனை காப் பாற்ற முயன்ற தந்தை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இரத்தினபுரி - பலாங்கொ டையில் ஆற்றில் நீராடுவதற் காக தந்தையும் மகனும் சென்றுள்ளனர்.

அப்போது, மகன் நீரில் மூழ்கியுள்ளார். அவரை காப் பாற்ற முயன்ற தந்தை நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில், பொலிஸ ரால் காப்பாற்றப்பட்ட தந்தை மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட நிலையில் உயிரிழந்தார்.

## ஹெரோயினுடன் இளைஞர்கள் கைது

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - மட்டக்குளியை சேர்ந்த 21, 25 வயதானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்ட னர்.

கைதானவர்களிடமிருந்து 6 கிராம் 25 மில்லி கிராம் ஹெரோ யின் கைப்பற்றப்பட்டது.

மட்டக்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர். (ஐ)

# மதுபோதையில் பேருந்தை செலுத்திய சாரதி கைது!

கொழும்பு, மே 13

மதுபோதையில் பேருந்தை செலுத்தினார் என்று கூறப்படும் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறையின் பாணந் துறை - ஹொரணை வழித்த டத்தில் தனியார் பேருந்து ஒன்று கவனக்குறைவாக செலுத் தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, குறித்த பேருந்தை பண்டாரகம - கள னிகம பகுதியில் பொலிஸார் தடுத்துநிறுத்தினர். சாரதியிடம் நடத்தப்பட்ட சோதனையில் அவர் மதுபோதையில் இருந் தமை உறுதிப்படுத்தப்பட்ட தாக பொலிஸார் தெரிவித் தனர்.

இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டார். அந்தப் பேருந் தில் 50 பயணிகள் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ரூ. 17,300 கோடி திறைசேரி முறி நாளை மறுதினம் ஏலத்துக்கு

கொழும்பு, மே 13

17 ஆயிரத்து 300 கோடி ரூபாய் பெறுமதியான திறை சேரி உண்டியல்கள் நாளை மறுதினம் ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் பெறு மதியான திறைசேரி உண்டி யல்களும் 182 நாட்கள் முதிர் வுக் காலத்தைக் கொண்ட 7 ஆயிரம் கோடி ரூபாய் பெறு மதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 7 ஆயிரத்து 300 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண் டியல்களும் இவ்வாறு ஏலம் விடப்படவுள்ளன. (ஐ)

# நாட்டை முன்னேற்றுவதற்கு எந்தவித தடைகளும் இல்லை

**ஜே. வி. பி. பொதுச் செயலர்**

கொழும்பு, மே 13

நாட்டை முன்னேற்றுவ தற்கு எவ்வித தடைகளும் கிடையாது என ஜே. வி. பி. இன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித் துள்ளார்.

கொழும்பில், நிகழ்வு ஒன் றின் பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து வெளியிடுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

"இதுவரை காலமும் உள்ளூ ராட்சி மன்றங்களை நிறுவு வதில் சிக்கல்கள் காணப்பட் டன. உள்ளூராட்சி மன்றங் களை துரித கதியில் நிறுவ வேண்டியது அவசியம். தேர்த லுடன் அந்தத் தேவையும் நிறை வேறியுள்ளது.

"கிராமிய மக்களின் வறு மையை ஒழிப்பது, கிளீன் சிறீ லங்கா திட்டத்தை அமுல்படுத் துதல் உள்ளிட்ட பல்வேறு திட் டங்களை நடைமுறைப்படுத் துவது இனி சுலபமானது.

"இதுவரை காலமும் உள்ளூ ராட்சி மன்ற உறுப்பி னர்கள் செயல்பட்டு வந்த முறையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். கல்வி, சுகாதா ரம் உள்ளிட்ட அடிப்படை வச திகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 20 மோ. சைக்கிள்கள் தீயில் எரிந்து நாசம்!



கொழும்பு, மே 13

மோட்டார் சைக்கிள் திருத்தகம் ஒன்று தீப்பிடித் ததில் 20 மோட்டார் சைக்கிள் கள் எரிந்து நாசமாகின.

கண்டி - கடுகண்ணாவை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து ஏற்பட் டுள்ளது.

மின்கசிவு காரணமாக இந் தத் தீ விபத்து ஏற்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிலாபம் கடற்கரை கடலரிப்பால் பாதிப்பு

சிலாபம், மே 13

சிலாபம் கடற்கரை மீண்டும் கடுமையான கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது என்று அந்தப் பகுதியின் மக்கள் தெரிவித்துள் ளனர். சிலாபம் - அம்பகதவில கிராமத்தில் உள்ள பல இடங் கள் கடலரிப்புக்கு உள்ளாகி யுள்ளன. இதனால், அந்தப் பகுதியிலுள்ள இறால் வளர்ப்பு பண்ணைகளும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

அத்துடன், இறால் வளர்ப் பாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் அபாயம் உள் ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இந்தியா - பாக். பதற்றம்:
# வாய்ப்புகளை சாதகமாக பயன்படுத்தி முன்னேறுவது குறித்து கலந்துரையாடல்!

கொழும்பு, மே 13

**இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றமான சூழ்நிலை மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலகளாவிய அரசியல் சூழ்நிலைகளால் இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள், சாதகங்கள் குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் கலந்துரையாடப்பட்டது.**

இந்தியா - பாகிஸ்தான் நெருக்கடியால் துறைமுகங்களுக்கு மேலதிக கப்பல்கள் வருவதற்கான கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றை வினைத்திறனுடன் கையாள்வதற்கும் தற்போதைய செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காமல் செயல்படுவதை உறுதி செய்வதற்கும் காணப்படும் இயலுமைகள் மற்றும் முன்மொழிவுகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

துறைமுகங்கள் போன்றே விமான நிலையங்களும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய அமைச்சர் பிமல் ரத்நாயக்க, உலகளாவிய அரசியல் சூழ்நிலையை வெற்றிகரமாக எதிர்கொண்டு அதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி துறைமுகம் மற்றும் விமான நிலைய செயல்பாடுகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்று இதன்போது அறிவுறுத்தினார்.

துறைமுக அதிகாரசபை அதிகாரிகள், விமான நிலைய அதிகாரிகள், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களின் முனைய அதிகாரிகள், கப்பல் நிறுவன பிரதிநிதிகள் மற்றும் சுங்க அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ஐ)

## கொழும்பு துறைமுகத்தில்
# 4 மணிநேர வேலைநிறுத்தம் ரூ. 30 கோடி அரசுக்கு இழப்பு

கொழும்பு, மே 13

கொழும்பு துறைமுகத்தின் ஜெயா கொள்கலன் முனையத்தில் நேற்று முன்தினம் இரவு ஊழியர்கள் மேற்கொண்ட 4 மணி நேர வேலைநிறுத்த போராட்டத்தால் 30 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக இலங்கை துறைமுக அதிகார சபை மதிப்பிட்டுள்ளது.

வெசாக் விடுமுறையில் பணிபுரியும் ஊழியர்களின் ஊக்கத் தொகையை குறைப்பதற்கு எடுத்த நடவடிக்கையை கண்டித்து நேற்றுமுன்தினம் இரவு 8 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வேலைநிறுத்தம் ஆரம்பமானபோது, பாதிக்கப்பட்ட முனையங்களில் 6 சரக்கு கப்பல்கள் நங்கூரமிட்டிருந்தன. இதனால், அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டன என்று துறைமுக அதிகார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெசாக் தினத்தில் ஊக்கத் தொகையை 10 ஆயிரம் ரூபாயாகவும் மறுநாள் ஊதியத்தை 5 ஆயிரம் ரூபாயாகவும் மட்டுப்படுத்த எடுத்த முடிவுக்கு எதிராகவே ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொத்மலை பேருந்து விபத்து
# காயமடைந்த பயணிகளை சந்தித்தார் பிரதமர் ஹரிணி!



கொழும்பு, மே 13

கொத்மலையில் 100 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களை பிரதமர் ஹரிணி, அமைச்சர் பிமல் ஆகியோர் நேற்று பார்வையிட்டு நலன் விசாரித்தனர்.

கம்பளை, பேராதனை மருத்தவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களையே அவர்கள் இருவரும் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இதன்போது, தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகள் மற்றும் சிகிச்சை பெறும் அனைத்து நோயாளிகளுக்கும் உடனடி சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் குறித்து பிரதமர் விசேட கவனம் செலுத்தினார்.

இதன்பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், “இது மிகவும் துன்பகரமான நிகழ்வு. இது போன்ற விடயங்களைத் தாங்கிகொள்வது மிகவும் கடினமானதாகும். சிறுவர்கள், பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களை இழந்திருப்பது வேதனையானது. எமது நாட்டில் தினமும் ஏராளமான போக்குவரத்து விபத்துகள் நடக்கின்றன. இவற்றைத் தடுக்க எமது போக்குவரத்து அமைச்சர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நேரத்தில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும், நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அளித்து வருகின்ற எமது மருத்துவர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கு நான் குறிப்பாக நன்றி தெரி விக்க விரும்புகிறேன்.

இதுபோன்று தங்கள் எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நோயா ளிகளை மருத்துவமனைகளுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்த அனைவரையும் இந்த மனிதாபிமான பணியை முன்னெடுத்த அனைவரையும் நான் நினைவுகூர விரும்புகிறேன்”, - என்றும் கூறினார்.

கொத்மலை - இறம்பொடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 100 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர். 57 பேர் காயங்களுக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹெலிகொப்டர் விபத்து:
# விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க பொலிஸுக்கு நீதிமன்று கட்டளை

கொழும்பு, மே 13

ஹெலிகொப்டர் விபத்துக் குறித்து முழுமையாக விசாரித்து அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தெஹியத்தகண்டி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை விமானப் படைக்கு சொந்தமான பெல் 212 ரக ஹெலிகொப்டர் பொலநறுவை மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், 6 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த விபத்து தொடர்பிலான அறிக்கைகளை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிக்கும் போதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரின் சிதைந்த பாகங்கள் மேலதிக ஆய்வுக்காக கட்டுநாயக்கா விமானப்படை தளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# போதைப்பொருள் விற்றவர் கைது!

கண்டி, மே 13

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்று கூறப்படும் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி - தெல்தெனிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் கைதானபோது, 20 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

# தம்பதியர் மர்ம மரணம்!

கொழும்பு, மே 13

சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்து கிடந்த தம்பதியரின் உடல்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கம்பஹா - கிரிந்திவெலவில் நேற்றுமுன்தினம் மாலை இந்த சடலங்கள் மீட்கப்பட்டன. 79, 74 வயதான தம்பதியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டனர்.

இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# உறவில் இருந்தவரை குத்திக்கொன்ற பெண்!

கொழும்பு, மே 12

திருமணத்துக்கு புறம்பான தொடர்பிலிருந்த இருவரிடையே ஏற்பட்ட தகராறு கொலையில் முடிந்தது. இதில், 38 வயது ஆண் ஒருவர் 42 வயது பெண்ணால் கத்தியால் குத்தப்பட்டு கொலையானார்.

களுத்துறை - பேருவளை - வலதர பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீடொன்றில் காயமடைந்த நிலையில் ஒருவர் விழுந்து கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அங்கு சென்ற பொலிஸார் அவரை மீட்டு பேருவளை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும் அவர் காயமடைந்து கிடந்த வீட்டின் பெண்ணுக்கும் திருமணத்துக்கு புறம்பான தொடர்பு இருந்ததாகவும் இந்நிலையில் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதன்போது, பெண் கத்தியால் குத்தியதில் அவர் உயிரிழந்தார் எனவும் கூறப்பட்டது.

சந்தேகநபரான பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# பீடி இலைகளுடன் நால்வர் கைது!

சிலாபம், மே 13

நாட்டுக்கு சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 497 கிலோ பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றினர். அத்துடன், இது தொடர்பில் 4 பேரை கைது செய்துள்ளனர்.

புத்தளம், கற்பிட்டி - முகத்துவாரம் கடற்கரை பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையிலேயே பீடி இலைகளுடன் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் புத்தளம் மதுவரி திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சிவனொளிபாத மலை யாத்திரை காலம் நிறைவு

கொழும்பு, மே 13

2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று ஆரம்பமான சிவனொளிபாதமலை யாத்திரை காலம் மத வழிபாடுகளுடன் நேற்று உத்தியோகபூர்வமாக நிறைவடைந்தது.

இதையடுத்து, வழிபாட்டுக்கு வைக்கப்படும் புனித பெட்டி, சிலை என்பன அடுத்த வருடம் சிவனொளிபாத மலை யாத்திரை காலம் ஆரம்பிக்கப்படும் வரை கல்பொத்தாவெல ரஜமகா விகாரையில் வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து மாதங்களில் இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் இந்த யாத்திரையில் ஈடுப்பட்டனர். (ஐ)

# இரு பேருந்துகள் மோதியதில் நான்கு பேர் படுகாயம்!

கொழும்பு, மே 13

தனியார் பேருந்தும் இ. போ. ச. பேருந்தும் மோதிய விபத்தில் நால்வர் காயம டைந்தனர்.

காலி - காலியில் ஹபராதுவை பொலிஸ் நிலையம் அருகே நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இ.போ. ச. பேருந்தின் பின்புறமாக தனியார் பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த நால்வரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அத்துடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு



# உள்ளூராட்சி தேர்தல் மூலம் அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை!

### முன்னிலை சோசலிச கட்சி

கொழும்பு, மே 13

உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் முடிவுகள் மூலம் மக்கள் அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனால் மக்களின் எச்சரிக்கையை புரிந்துகொண்டு அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வர வேண்டும் என முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளர் குமார் குணரத்னம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் கடந்த காலங்களில் தேர்தல் மேடைகளில் தெரிவித்த விடயங்களை மறந்து புதிய தாராளவாத கொள்கையில் வேகமாக பயணிக்கிறது. மக்களின் வரிச்சுமையை குறைப்பதாக தெரிவித்த வாக்குறுதியை மறந்து நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய அத்தியாவசிய உணவு பொருட்களின் விலையை மேலும் அதிகரித்துள்ளது. பாடசாலை உபகரணங்கள், சுகாதார உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரி ஒரு சதமேனும் குறைக்கவில்லை.

மக்கள் விரோதமாக நாட்டின் பொருளாதார சுதந்திரத்தை இந்தியாவுக்கு காட்டிக் கொடுக்கும் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்கிறது. இவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் கடுமையாக எதிர்த்து வந்த அரச அடக்கு முறையை இன்று போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமையிலேயே உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றது. தேர்தல் பெறுபேறுகளை பார்க்கும் போது அரசாங்கத்தின்மீதிருந்த நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது. எனவே, இந்த தேர்தல் பெறுபேறு மூலம் மக்கள் வழங்கிய எச்சரிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார்.

# நாடு முழுவதும் நேற்று வெசாக் அலங்காரங்கள்!



கொழும்பு, மே 13

**வெசாக் தினமான நேற்று நாடு முழுவதும் புத்தரின் வரலாற்று கதைகளை சித்தரிக்கும் அலங்காரங்கள் மற்றும் வெளிச்சக்கூடு அலங்கார வலயங்கள், தானசாலைகள் என்பன அமைக்கப்பட்டிருந்தன.**

தலைநகர் கொழும்பில் அதிகளவிலான வெசாக் தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலும் இராணுவத்தினரால் வெசாக் வலயங்கள் அமைக்கப்பட்டு, தான சாலைகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

கொழும்பின் பலாமரச்சந்தி, பொரளை, தெமட்டகொடை, பாலத்துறை, புறக்கோட்டை, பௌத்தலோக மாவத்தை, கங்காராமை மற்றும் பல இடங்களில் வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டன.

நேற்று ஆரம்பமான வெசாக் பந்தல்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெசாக் தினமான நேற்று தென்னிலங்கை முழுவதும் பொதுமக்களால் வெசாக் அலங்கார தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதேபோல, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் இராணுவத்தினராலும் சிங்கள மக்கள் அதிகம் வாழும் பகுதிகளிலும் வெசாக் வலயங்கள், தான சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மண்வெட்டியால் அண்ணனை தாக்கிக் கொன்ற தம்பி கைது!

நுவரெலியா, மே 12

ஒரே வீட்டில் வசித்து வந்த சகோதரர்களிடையே ஏற்பட்ட தகராறில் தம்பி அண்ணனை மண்வெட்டியால் தாக்கிக் கொன்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா - லிந்துலை பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த 53 வயது நபரே உயிரிழந்தார்.

சகோதரர்களிடையே ஏற்பட்ட தகராறே இந்தக் கொலைக்குக் காரணம் என்று தெரிவித்த லிந்துலை பொலிஸார் கொலை சந்தேகநபரான தம்பியை கைது செய்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

# சுரங்க அகழ்வில் ஈடுபட்ட ஆறு சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 13

சட்டவிரோதமாக சுரங்க அகழ்வில் ஈடுபட்டிருந்த 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மொனராகலை - படல்கும் புர - ஓயஆர பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். புத்தல பொலிஸ் சிறப்பு அதிர டிப்படை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைதானவர்கள் படல்கும்புர, மெதகம பிரதேசங்களை சேர்ந்த 32, 37, 45, 50 மற்றும் 59 வயது நபர்களாவர். கைதானவர்கள் படல்கும்புர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மின்சாரம் தாக்கி சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, மே 13

வெசாக் தினத்துக்காக குடும்பத்தாருடன் இணைந்து வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

களுத்துறை - மொரகஹஹேன - மில்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 6 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

சிறுமி மின்விளக்குகளை அலங்கரித்துக் கொண்டிருந்தபோதே மின்சாரத்தால் தாக்குண்டு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அரசாங்கம் எதை கூறினாலும் அதன் செல்வாக்கு வீழ்ச்சியே!

### ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது




கண்டி, மே 13

தற்போதைய அரசாங்கம் எவ்வளவு தூரம் தமது சேவை பற்றி கூறினாலும் ஆறு மாத காலத்தில் அவர்களின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்ததாக முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடந்த சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் தமக்கு அதிக ஆதரவு கிடைத்திருப்பதாக அவர்கள் எவ்வளவு தூரம் புகழ் பாடினாலும், கடந்த தேர்தல் முடிவுகளின்படி அவர்கள் ஆறு மாத காலத்துக்கு முன் பெற்ற வாக்குகளை விடவும் குறைந்த வாக்குகளையே பெற்றுள்ளனர்.

அதாவது, அரசு கடந்த தேர்தலைவிட இம் முறை சுமார் 23 இலட்சம் வாக்குகளால் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த தேர்தலில் வாக்களித்த 23 இலட்சம் மக்கள் இம்முறை அவர்களுக்கு வாக்களிக்க தவறியுள்ளனர்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி கடந்த தேர்தலை விட இம்முறை கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளமை குறிறிப்பிடத்தக்கது.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அதில் தற்போதைய ஆட்சியாளர்கள் தோல்வி அடைவது நிச்சயம் - என்றார். (ஐ)

# சவால்களிலிருந்து மீள்வதற்கு இலங்கை எம்முடன் இணைந்து செயல்பட வேண்டும்!

### உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா



கொழும்பு, மே 13

நாடு முகங்கொடுத்துவரும் நீண்டகால சவால்களை கையாள்வதற்கும் நிலையான சுபீட்சத்தை அடைவதற்கும் இலங்கையும் உலக வங்கியும் கூட்டிணைந்து செயலாற்ற வேண்டியது அவசியம் என உலக வங்கி குழுமத்தின் தலைவர் அஜய் பங்கா வலியுறுத்தியுள்ளார்.

உத்தியோகபூர்வ பயணமாக கடந்த புதன்கிழமை நாட்டுக்கு வருகைதந்த உலக வங்கி குழுமத்தின் தலைவர் அஜய் பங்கா, ஜனாதிபதி அநுர குமார உள்ளிட்ட முக்கிய தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, நாடு முகங்கொடுத்துவரும் நீண்டகால சவால்களைக் கையாள்வதற்கும் நிலையான சுபீட்சத்தை அடைந்துகொள்வதற்கும் இருதரப்பினரும் கூட்டிணைந்து செயலாற்றவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இதேபோன்று, கல்வி, சுற்றுலா, சுகாதாரம், விவசாயம், புதுப்பிக்கத்தக்க சக்திவலு, வர்த்தகம் மற்றும் முதலீடு என்பன உள்ளடங்கலாக இலங்கையின் அபிவிருத்தியில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கக்கூடிய துறைகளில் சமகால மற்றும் எதிர்கால ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக்கொள்வது குறித்து இரு தரப்பினரும் ஆக்கபூர்வமான கருத்துகளை பகிர்ந்துகொண்டனர்.

அத்தோடு, இயற்கை மற்றும் பாரம்பரிய கலாசார வளங்களின் நிலைத்திருப்பை உறுதி செய்வதற்கும் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், செயற்திறன்மிக்க சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்புவதற்கும் ஏற்றவாறான செயற்திட்டங்கள் மூலம் இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யத் தயாராக இருப்பதாகவும் அஜய் பங்கா இதன்போது தெரிவித்தார். (ஐ)

# மின்சார திருத்த கட்டண முன்மொழிவு பொது பயன்பாடு குழுவிடம் இவ்வாரம்!

கொழும்பு, மே 13

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவை மின்சார சபை இந்த வாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்கவுள்ளது.

வருடாந்த மின்சார கட்டண திருத்தத்துக்கு அமைய எதிர்வரும் ஜூன் மாதம் மின்சார கட்டணம் திருத்தப்படவுள்ளது. இம்முறை மின்கட்டணம் குறைந்த சதவீதத்தால் அதிகரிக்கும் என்று ஜனாதிபதி அநுர குமார குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஐந்தாம் தவணை விடுவிப்புக்கு மின்சார கட்டண திருத்த நிர்ணய முறைமை சிறந்த முறையில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்தநிலையில், மின்சார சபையால் முன்வைக்கப்படும் மின்சார கட்டண திருத்த முன்மொழிவை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஆராய்ந்ததன் பின்னர், மின்சார கட்டணம் திருத்தம் தொடர்பில் பொதுமக்கள் தமது யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு கால அவகாசம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க எந்த ஏற்பாடுகளையும் செய்யவில்லை

## அநுர மீது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அதிருப்தி

கல்முனை, மே 13

**“ஒரு நாளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவேன் என்று கூறியவர் ஆட்சிக்கு வந்ததும் எந்தவொரு ஏற்பாடு களையும் செய்யவில்லை”- இவ்வாறு அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.**

மே மாதம் 12ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமாகும். இதனை முன்னிட்டு

அம்பாறை பாண்டிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மே 12ஆம் திகதி முதல் மே 18ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமாகும். வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் அனைத்து பொதுமக்களும் இந்த வாரத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஒன்றிணைய வேண்டும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்று முடிந்த போர் காரணமாக ஓர் இனம் அழிந்தது. இரத்த ஆறு ஓடியது. 16 வருட காலமாக வலிகளை சுமந்து எங்களது உறவுகளுக்கான நீதி கிடைக்காமல் இன்று வரை நாங்கள் வீதிகளில் கண்ணீருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்களுக்கான உரிய நீதி கிடைக்கும் வரை இந்தப் போராட்டத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று நீதியைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல உண்மையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் இலங்கை அரசு போர் நடந்து கொண்டிருக்கும் போது பொருளாதாரத் தடையை விதித்து ஒரு உணவு கூட அப்பகுதிக்கு எடுத்து செல்ல முடியாத கால கட்டத்தில் அங்கு பட்டினிச் சாவு ஏற்பட்டது. அப்போது தயாரிக்கப்பட்டதுதான் முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும்.

அன்று முள்ளிவாய்க்காலில் கஞ்சிக்கு வரிசையில் நின்று கொண்டிருந்த வேளையில் எத்தனையோ ஷெல் தாக்குதல்கள், விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் கஞ்சி சிரட்டையுடன் எம் உறவுகள் அவ்விடத்தில் மரணம் அடைந்தனர்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுர ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனக்கும் இவ்வாறான வலி தெரியும் எனவும் தனது தாயும் பிள்ளையை தொலைத்து விட்டு கண்ணீர் வடித்த தாகவும் கூறி ஆட்சிக்கு வந்திருந்தார். ஆனால்,

இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளுக்கு என்ன செய்யலாம், என்ன செய்ய முடியும் என்ற தீர்மானம் எதையும் அவர் மேற்கொள்ளவில்லை.

ஆனால் ஒரு நாளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவேன் அல்லது இல்லாமல் செய்வேன் என்று கூறியவர் இன்று அவர் ஆட்சிக்கு வந்ததும் அதற்கான எந்தவொரு ஏற்பாடுகளை யும் செய்யவில்லை”- என்றார். (எ-01)

# சட்டவிரோத மணல் கடத்தல்: கரடியனாற்றில் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மே 13

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்கொல்லா பகுதியில், சட்டவிரோதமாக மணல் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், மணல் கடத்தலுக்காக பயன்படுத்திய உழவியந்திரத்துடன் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



மட்டக்களப்பு, மே 13

சத்துருக்கொண்டான் படுகொலை நினைவுத் தூபியில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீர்த்தவர்களின் ஆத்ம சாந்திக்காக விளக்கேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. (எ)

# “முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மிகவும் அவசியமான விடயமாகும்”

மட்டக்களப்பு, மே 13

வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட உறவுகள், தமது கைகளினால் உறவுகளை வழங்கிய உறவுகளுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது மிகவும் அவசியமான விடயமாகும். எனவே, மே 12 தொடக்கம் 18 வரை உயிர் நீர்த்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசியத்துக்காக பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன்வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஜனாதிபதி வரலாறு தெரியாத எங்கள் இளம் சமூகத்திடம் தன்னை நல்லவராக காட்டும் செயல்பாட்டினையே முன்னெடுத்து வருகின்றார்.

வெளித் தோற்றத்தில் தன்னை நல்லவராக காட்டிக் கொண்டு சிங்கள அரசியலுக்குள் முழுமையாக சிக்கியுள்ளதாகவும் மட் டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அ. அமல நாயகி தெரிவித்தார். (எ)



திருகோணமலை தோப்பூரில் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் அரச ஊழியர்களுக்காக நடத்தப்பட்ட இரண்டாம் மொழி கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு நேற்று முன்தினம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# தமிழினத்தை உதாசீனப்படுத்தும் போக்கிலேயே அரசு செயல்படுகிறது

## சிறிநாத் எம். பி. கடும் சாடல்



மட்டக்களப்பு, மே 13

அநுர அரசாங்கமும் தமிழினத்தை உதாசீனப்படுத்தும் வகையிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளுக்கான நீதியான நடவடிக்கைகள், தாயக நிலங்கள் விடுவிக்கப்படும் வரையில் இந்த நாடு முன்னேற்றகரமான நிலைக்கு செல்ல முடியாது என்ற விடயத்தை சிங்கள அரசும் சிங்கள தேசிய இனமும் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழின அழிப்பு வாரம் நேற்று மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் நினைவுத்தூபி அருகில் உணர்வுபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், “ஓர் இன அழிப்பு நோக்குடன் வடக்கு - கிழக்கில் பல படுகொலைகள் நடத்தப்பட்டதுடன் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக பல இடங்களில் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன.

சத்துருக்கொண்டானில் நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழ் மக்கள் கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்த விசாரணைகள் பின்னர் முடக்கப்பட்டன.

இன்று இந்த அரசாங்கம் பட்டலந்த வதை முகாம் விடயங்களை கையிலெடுத்து அது தொடர்பான விசாரணைகளை மீள முன்னெடுத்திருக்கும் அதேநேரம் வடக்கு - கிழக்கில் பல இடங்களில் படுகொலைகள் நடைபெற்ற வரலாற்றின் சாட்சியங்களாகவும் ஆவணங்களாகவும் இருக்கின்ற போதிலும் அது தொடர்பான எந்த முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப் படாமல் தமிழ் மக்களை உதாசீனப்படுத்துகின்ற, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை செவிமடுக்காத போக்கு, தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதற்கான உறுதிப்பாடற்ற நிலையிலே அவர்களுக்கான நியாயமான உரிமைகள், அவர்களின் சுதந்திரமான வாழ்க்கைக்கான உறுதிப்பாடுகள் இல்லாத நிலையிலேயே சிங்கள பௌத்த தேசிய அரசுகள் நடந்து கொள்கின்றன.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலே பொதுமக்கள் கொத்துக்கொத்தாக இலட்சக்கணக்கில் கொல்லப்பட்ட சம்பவமானது தமிழினத்தை இந்த நாட்டில் இல்லாமல் செய்வதற்கும், வடக்கு - கிழக்கு தாயகப்பகுதியில் தமிழ் மக்களின் இனப்பரம்பலை குறைத்து கையேந்தும் நிலையிலேயே நிர்க்கதியற்ற நிலையில் தமிழ் மக்கள் வாழவேண்டும், தமிழ் மக்கள் தமது உரிமைகளை இனி ஒருபோதும் போராடி கேட்கக்கூடாது என்ற அடிப்படையிலே பல்வேறு திட்டமிட்ட படுகொலைகள் நடந்தேறின.

இந்தப் படுகொலை களுக்கான நீதி நியாயம் கூட எந்தவகையான வழிகளிலும் கிடைக்கவில்லை. யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 வரு டங்கள் கடந்துள்ள நிலையி லும் நீதி நியாயத்துக்காக தமிழ்த் தேசிய சக்திகள் தமிழி னத்தில் பற்றுக் கொண்ட அமைப்புகள் செயல்பாடுகளை முன்னெடுக்கின்ற போதிலும் அதற்கான எந்த அங்கீகாரத் தையும் இந்த நாடு வழங்க வில்லை.

இவ்வாறான செயல்பாடுகள் இந்த நாட்டில் நியாயமாக, நிம்மதியாக வாழமுடியும் என்ற நம்பிக்கையை இல்லாமல் செய்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு கூட தமிழ் மக்கள் இரண்டாம் தரப்பாக அடக்கி ஒடுக்கப்ப டுதலே காரணமாக அமைந்தி ருக்கின்றது. இவற்றை சிங்கள தேசிய இனம் புரிந்து கொள்ளாத நிலையில் இந்த நாடு சுபீட்ச மான நாடாக மாறுவதற்கு எந்தவிதமான வாய்ப்புகளும் இல்லை”- என்றார். (எ)

இந்தியா - பாகிஸ்தான் இடையே

## போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு பாப்பரசர் லியோ வரவேற்பு



வத்திக்கான், மே 13

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு போப் லியோ வரவேற்பு தெரிவித்துள்ளார்.

உலகில் அமைதிக்கான அற்புதம் ஏற்படுவதற்கு கடவுள் ஆசி வழங்கும்படி வேண்டிக் கொள்கிறேன் என்றும் அவர் கூறினார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக வட அமெரிக்காவைச் சேர்ந்த கார்டினல் ராபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் போப் 14ஆம் லியோ என அழைக்கப்படுவார் என்று கார்டினல்கள் அறிவித்தனர்.

இந்த நிலையில், போப் லியோ, புதிய பாப்பரசராக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் முதல் ஞாயிற்றுக்கிழமையான நேற்று முன்தினம் பொதுமக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இதில், உலகம் முழுவதும் உள்ள அன்னையருக்கு அன்னையர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

உக்ரைன் மற்றும் காஸாவில் அமைதி ஏற்பட வேண்டும் என வேண்டுகோளாக கேட்டுக் கொண்டார். உடனடி போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். பணயக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் மற்றும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் போப் லியோ வலியுறுத்தினார்.

மறைந்த போப் பிரான்சிஸ் கூறிய விடயங்களை எதிரொலிக்கும் வகையில் அவர் பேசும் போது, உலக நாடுகளின் மோதல்களை கடுமையாக சாடினார். 3ஆம் உலகப் போருக்கு ஈடாக நாடுகள் மோதிக் கொள்ளும் சம்பவங்களை கடிந்து கொண்டார்.

இதேபோன்று, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு போப் லியோ வரவேற்பு தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகள் நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். உலகில் அமைதிக்கான அற்புதம் ஏற்படுவதற்கு கடவுள் ஆசி வழங்கும்படி வேண்டிக் கொள்கிறேன் என்றும் அவர் கூறினார். (எ)

கொங்கோவில் கனமழை

# வெள்ளத்தில் சிக்கி 100 பேர் உயிரிழப்பு



கின்ஷாசா, மே 13

**ஆபிரிக்க நாடான கொங்கோவில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.**

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. இதன்படி கிழக்கு மாகாணமான கிவுவில் வியாழக்கிழமை இரவு முதல் வெள்ளிக்கிழமை வரை மழை வெளுத்து வாங்கியது. இதன் காரணமாக நங்கன்ஜா நகரில் உள்ள டாங்கன்யிகா உட்பட பல ஏரிகள் நிரம்பின. தொடர்ந்து பெய்த கனமழையால் அந்த ஏரியின் கரை உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால், ஏரிக்கரையோரம் அமைந்துள்ள கசாபா கிராமத்தை வெள்ளம் அடித்துச் சென்றது. இதில் அங்கிருந்த பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இந்தக் கட்டட இடிபாடு மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கி பலர் அடித்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து மீட்புப் பணி துரிதப்படுத்தப்பட்டது. இதில் மீட்புப் படையினருக்கு உதவியாக உள்ளூர் மக்களும் இணைந்தனர். அவர்கள் படகுகள் மூலம் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றினர்.

எனினும், இதுவரை நடைபெற்ற மீட்புப் பணியில் 100 இற்கும் மேற்பட்டோர் சடலமாக மீட்கப்பட்டனர். மேலும், 50 பேர் மாயமானதாக கூறப்படுகிறது. எனவே, அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கிடையே வெள்ளப்பெருக்கால் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. (எ)

"இது ஒரு நேர்மறையான குறியீடு"

## போரை நிறுத்துவதற்கான ரஷ்யாவின் அறிகுறிக்கு ஜெலன்ஸ்கி வரவேற்பு

கீவ், மே 13

உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து ரஷ்யா பரிசீலித்து வருவதற்கான அறிகுறியை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வரவேற்றுள்ளார்.

இது ஒரு நேர்மறையான அறிகுறி என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் முழுமையான, நீடித்த மற்றும் நம்பகமான போர் நிறுத்தமே அமைதிக்கான முதல்படி என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ள பதிவில், "இறுதியாக போரினை முடிவுக்கு கொண்டுவருவது பற்றி ரஷ்யர்கள் பரிசீலிக்கத் தொடங்கியிருப்பது ஒரு நேர்மறையான அறிகுறியாகும். ஒட்டுமொத்த உலகமும் இதற்காக நீண்ட நாட்களாக காத்திருந்திருக்கிறது. போரினை முடிவுக்கு கொண்டுவருவதற்கான உண்மையான முதல் படி, போர் நிறுத்தமேயாகும்.

ஒவ்வொரு நாளும் தொடர்ந்து உயிர்களைக் கொல்வதில் எந்த அர்த்தமும் இல்லை. முழுமையான, நீடித்த மற்றும் நம்பகமான போர் நிறுத்தத்தை ரஷ்யா உறுதிப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அமைதி பேச் சுக்கு உக்ரைன் தயாராக இருக் கிறது" என்று தெரிவித்துள்ளார்.

## சதுரங்க விளையாட்டுக்கு ஆப்கானிஸ்தானில் தடை

காபூல், மே 13

சதுரங்க விளையாட்டுக்கு தடை விதிக்கப்படுவதாக ஆப்கானிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து விளையாட்டு இயக்குநரக செய்தித் தொடர்பாளர் அடல் மஷ்வானி கூறுகையில், "இஸ்லாமிய ஷரியாவின் கீழ் சதுரங்கம் சூதாட்டத்தின் ஒரு வழிமுறையாக கருதப்படுகிறது. இது நாட்டின் நன்மையை ஊக்குவித்தல் மற்றும் தீமையைத் தடுப்பதற்கான சட்டத்தின் படி தடை செய்யப்பட்டுள்ளது.

சதுரங்க விளையாட்டுக்கு மத ரீதியான ஆட்சேபனைகள் உள்ள நிலையில் அது தீர்க்கப்படும் வரை, ஆப்கானிஸ்தானில் இந்த விளையாட்டு நிறுத்தி வைக்கப்படும்"-இவ்வாறு அவர் கூறினார். இந்த முடிவு சதுரங்க ஆர்வலர்கள் மற்றும் தொடர்புடைய வணிகங்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக பெண்கள் விளையாட்டுகளில் பங்கேற்கத் தாலிபான் அரசு தடை விதித்தது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஒப்ரேஷன் சிந்தூர் இன்னும் முடியவில்லை

### இந்திய விமானப்படை அறிவிப்பு

புதுடில்லி, மே 13

"ஒப்ரேஷன் சிந்தூர்" இன்னும் முடியவில்லை என்று இந்திய விமானப்படை அறிவித்துள்ளது.

சரிபார்க்கப்படாத தகவல்களை பரப்பவோ, நம்பவோ வேண்டாம் என்றும் இந்திய விமானப்படை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே இடம்பெற்று வந்த தாக்குதல்கள் முடிவுக்கு வந்தன. இருந்தும், எல்லைப் பகுதிகளில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த நிலையில், ஒப்ரேஷன் சிந்தூர் இன்னும் முடியவில்லை என்று இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இந்திய விமானப் படை தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்திருப்பதாவது

இந்திய விமானப்படை ஒப்ரேஷன் சிந்தூரில் தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை துல்லியமாகவும், தொழில்முறையுடனும் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம். தேசிய நோக்கங்களுடன் இணைந்து, மற்றும் விவேகமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செயல்பாடுகள் இன்னும் நடந்து கொண்டிருப்பதால், சரியான நேரத்தில் விரிவான விளக்கவுரை நடத்தப்படும். சரிபார்க்கப்படாத தகவல்களை பரப்பவோ, நம்பவோ வேண் டாம் என்று இந்திய விமானப் படை கேட்டுக்கொள்கிறது-இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள் ளது. (எ)

# காஷ்மீர் பிரச்னையில் அமெரிக்க மத்தியஸ்தம்

### ட்ரம்ப்புக்கு பாகிஸ்தான் நன்றி

இஸ்லாமாபாத், மே 13

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான காஷ்மீர் பிரச்னையில் மத்தியஸ்தம் செய்ய முன்வந்திருப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்துள்ள பாகிஸ்தான் அரசு, ஒப்ரேஷன் சிந்தூருக்கு பின்பு இந்தியாவுடன் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதில் அமெரிக்கா ஆற்றிய பங்கினை வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதன் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியா - பாகிஸ்தான் உறவு குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அறிக்கையை பாகிஸ்தான் வரவேற்கிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சமீபத்திய போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஆதரிப்பதில் அமெரிக்கா மற்றும் பிற நட்பு நாடுகள் ஆற்றிய முக்கியமான பங்களிப்பை பாகிஸ்தான் பாராட்டுகிறது. இது பிராந்திய ஸ்திரத்தன்மையை பேணுவதற்கான ஒரு படியாகும்.

தெற்காசியாவிலும் அதற்கு அப்பாலும் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் நீண்ட கால பிரச்னையான காஷ்மீர் சிக்கலைத் தீர்ப்பதற்கு டொனால்ட் ட்ரம்ப் முன்வந்திருப்பதற்கு எங்களின் பாராட்டுகள். ஜம்மு காஷ்மீர் பிரச்னைக்கான எந்த ஒரு நியாயமான மற்றும் நீண்டகால தீர்வும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையின் தீர்மானத்தின் படி இருக்க வேண்டும். மேலும், ஜம்மு காஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமைகள் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதாக இருக்க வேண்டும் என்பதை பாகிஸ்தான் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் வளத்தினைப் பேணுவதற்கான முயற்சிகளில் அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளுடன் ஈடுபடுவதற்கு பாகிஸ்தான் உறுதிபூண்டுள்ளது- என தெரிவிக்கப்பட் டுள்ளது.

# முத்தரப்பு மகளிர் கிரிக்கெட்: சம்பியனானது இந்திய அணி




கொழும்பு, மே 13

முத்தரப்பு மகளிர் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சம்பியனானது. இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய 3 நாட்டு மகளிர் அணிகள் இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் கொழும்பில் நடைபெற்றது.

இதில் லீக் சுற்று முடிவில் இந்தியா 3 வெற்றி, ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று முதலிடமும், இலங்கை 2 வெற்றி, 2 தோல்வியுடன் 4 புள்ளிகளை பெற்று 2ஆவது இடமும் பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

தென்னாபிரிக்கா ஒரு வெற்றி, 3 தோல்வியுடன் (2 புள்ளி) கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டு வெளியேறியது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட் களை இழந்து 342 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக மந்தனா 116 ஓட்டங்களும், ஹர்லீன் தியோல் 47 ஓட்டங்களும் அடித்தனர். இலங்கை தராப்பில் மல்கி மதாரா, விஹாங்கா மற்றும் சுகன்திகா குமாரி தலா 2 விக்கெட்கள் கைப்பற்றினர்.

பின்னர் 343 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி தொடக்கம் முதலே இந்திய பந்துவீச்சில் தடுமாறியது. தொடக்க வீராங்கனையான ஹாசினி பெரேரா ஓட்டம் எதுவும் இன்றி வெளியேறினார்.

பின்னர் களமிறங்கிய வீராங்கனைகளில் விஷ்மி குணரத்ன -36 ஓட்டங்கள், அணித் தலைவி சமரி அத்தப்பத்து -51 ஓட்டங்கள், நிகாஷி டி சில்வா -48 ஓட்டங்கள் எடுத்தனர். இறுதியில்48. 2 ஓவர்கள் தாக்குப்பிடித்த இலங்கை அணி 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத் தது. இதன் மூலம் 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி சம்பியனானது. (எ)

## நியூசிலாந்தின் சாதனையை சமன் செய்தது இந்திய அணி



கொழும்பு, மே 13

நியூசிலாந்தின் சாதனையை இந்திய மகளிர் அணி சமன் செய்துள்ளது.

இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய 3 நாட்டு மகளிர் அணிகள் இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் கொழும்பில் நடைபெற்றது. இதில், இந்திய அணி சம்பியனானது.

இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான இறுதிப் போட்டியில் 300 ஓட்டங்களுக்கு மேல் அடித்ததன் மூலம் நியூசிலாந்தின் சாதனையை இந்திய மகளிர் அணி சமன் செய்துள்ளது. இதன்படி, இந்திய மகளிர் அணி ஒரு நாள் கிரிக்கெட்டில் இந்த ஆண்டில் 4ஆவது முறையாக 300 ஓட்டங்களை கடந்திருக்கிறது. ஓராண்டில் அதிக முறை 300இற்கும் மேல் ஓட்டங்கள் சேர்த்த நியூசிலாந்தின் (2018ஆம் ஆண்டில் 4 முறை) சாதனையை சமன் செய்துள்ளது. (எ)

## ஸ்வரேவ் வெற்றி



ரோம், மே 13

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜேர்மனி வீரர் அலெக்ஸ்சாண்டர் ஸ்வரேவ் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அலெக்ஸ் சாண்டர் ஸ்வரேவ் - லிதுவேனியா வீரர் வில்லியஸ் கௌபாஸ் ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் அலெக்ஸ்சாண்டர் ஸ்வெரேவ் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் அவர் 6 -4, 6 - 0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார் இதனால் ஸ்வெரேவ் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

## டெஸ்ட் சம்பியன்ஷிப்: ஆஸி. வீரர் புதுத்திட்டம்




சிட்னி, மே 13

ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கிறது. இந்தப்போட்டியில் அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டியில் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலியா வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளதாக பலர் கூறிவருகின்றனர்.

ஏனெனில் அந்த அணியில் வேகப்பந்துவீச்சு துறை தென்னாபிரிக்காவை விட வலுவானதாகவுள்ளது. இருப்பினும் பலம் வாய்ந்த அவுஸ்திரேலியாவை வீழ்த்துவோம் என்று தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபாடா சவால் விடுத்துள்ளார்.

இந்த நிலையில் இந்தப் போட்டிக்கு தயாராகும் பொருட்டு அவுஸ்திரேலிய அணியின் வீரர் மார்னஸ் லபுஷ்சேன் புதிய திட்டம் ஒன்றை கையிலெடுத்துள்ளார்.

இறுதிப்போட்டி இங்கிலாந்தில் நடைபெறவுள்ளதால் அங்குள்ள சூழ்நிலைக்கேற்ப தயாராகும் பொருட்டு இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட்டில் விளையாட முடிவு செய்துள்ளார்.

2019ஆம் ஆண்டு முதல் கவுண்டி கிரிக்கெட்டில் கிளாமோர்கன் அணிக்காக விளையாடி வரும் லபுஷ்சேன் நார்தாம்ப்டன்ஷயர் மற்றும் மிடில்செக்ஸ் அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் விளையாட முடிவு செய்துள்ளார். (எ)

## குஜராத் அணி வீரர்கள் மீண்டும் தீவிர பயிற்சி



புதுடில்லி, மே 13

குஜராத் அணி வீரர்கள் மீண்டும் தீவிர பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவிய போர் பதற்றத்தால் நாட்டில் அசாதாரணமான சூழல் நிலவியது. இதனால், 18ஆவது ஐ.பி.எல். கிரிக் கெட் தொடர் ஒரு வாரம் நிறுத்தப்படுவதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது. இதையடுத்து பெரும்பாலான வெளிநாட்டு வீரர்கள் தாயகம் திரும்பினர். இன்னும் 12 லீக் மற்றும் 4 பிளே-ஒப் சுற்று என மொத்தம் 16 போட்டிகளை நடத்த வேண்டியுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டன. இதன் காரணமாக ஐ.பி.எல். போட்டியை மீண்டும் தொடங்க இந்திய கிரிக்கெட் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதையொட்டி ஐ.பி.எல். நிர்வாகக் குழு உறுப்பினர்களும், கிரிக்கெட் சபை நிர்வாகிகளும் ஆலோசனை நடத்தினர்.

இதையடுத்து, ஐ. பி. எல். தொடரை எதிர்வரும் 16 அல்லது 17ஆம் திகதி தொடங்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாக தங்கள் அணி வீரர்களை திரும்ப அழைக்கும்படி 10 அணி நிர்வாகங்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எஞ்சிய ஐ.பி.எல். தொடருக்கான போட்டி அட்டவணை இன்னும் வெளியாகாத நிலையில் குஜராத் டைட்டன்ஸ் அணியினர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த பயிற்சி முகாமில் சுப்மன் கில், முகமது சிராஜ், ஷெர்பேன் ரூதர் போர்ட், ககிசோ ரபாடா உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்றனர்.நடப்பு ஐ. பி. எல். தொடரில் இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் குஜராத் அணி 11 போட்டிகளில் 8 வெற்றி, 3 தோல்வியுடன் 16 புள்ளிகள் பெற்று புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. (எ)

## இத்தாலி ஓபின் ரென்னிஸ் அல்காரஸ் அபார வெற்றி



ரோம், மே 13

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரில் கார்லஸ் அல்காரஸ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், செர்பியாவின் லாஸ்லோ டிஜெரே உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய அல்காரஸ் 7-6 (7-2), 6-2 என்ற செட் கணக்கில் லாஸ்லோ டிஜெரேவை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் 4ஆவது சுற்று ஆட்டத்தில் கார்லஸ் அல்காரஸ், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ் உடன் மோதவுள்ளார். (எ)

## முள்ளிவாய்க்கால்...

- ஆலடியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் முழுவதும் வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் மக்கள் உப்பு இல்லாத கஞ்சியை பருகியே பட்டினிச் சாவிலிருந்து தப்பினர். இதனை நினைவு கூரும் முகமாகவும் இந்த வரலாற்றை வருங்காலத்தினருக்கு கடத்தும் நிகழ்வாகவும் மக்களிடம் அரிசி சேகரித்து கஞ்சி காய்ச்சி வழங்கும் பணி மாணவர்களால் முன்னெடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாளை புதன்கிழமை 14ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக கட்டட தொகுதியில் இரத்த தான முகாம் ஒன்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்கள் அனுபவித்த துயரங்களை எடுத்துக்காட்டும் விதமாக பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் கண்காட்சி ஒன்றையும் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (ஐ)

## முதல் மாவீரர்...

மாவீரரான லெப். சங்கர் (செல்வ சந்திரன் சத்தியநாதன்) 1982 நவம்பர் 27ஆம் திகதி வீரச்சாவடைந்தார். இவர் வீரச்சாவடைந்த நாளே மாவீரர் நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தையிட்டி...

உள்ளிட்ட பலர் பங்கேற்றறனர்.

நேற்றைய தினம் போராட்டம் நடைபெற்றபோது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு கஞ்சி காய்ச்சி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

தையிட்டி விகாரையை அகற்ற வேண்டும் என்று கோரி ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆட்சி...

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவது யார் என்பதையே பெரும்பாலானவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியிலிருந்தே அதிகளவான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். 48 உறுப்பினர்கள் எமது கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 29 உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களின் முதல்வர் வேட்பாளர் தோல்வியடைந்துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் இளம் வேட்பாளருடன் போட்டியிட்டு அவர் தோல்வி அடைந்திருக்கிறார்.

தொகுதியில் மேயர் வேட்பாளர் தோல்வியடைந்த நிலையிலும், மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாகக் கூறுவதற்கு வெட்கமில்லையா? அவர்கள் முயற்சித்தாலும் அதற்கான வாய்ப்பு இல்லை. கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி சிறப்புரிமைகளையோ, பணத்தையோ வழங்கி எவரையும் விலைக்கு வாங்கப் போவதில்லை என்பதைப் பொறுப்புடன் கூறிக்கொள்கிறேன். உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் மோசமான பழைய முறைமையை எமது அரசாங்கம் ஒரு போதும் பின்பற்றாது.

நாம் பெற்ற வெற்றியை பலப்படுத்துவதற்கு ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் அவர்களுடன் பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டு மக்களுக்கு சேவையாற்றத் தயாராக இருக்கிறோம் - என்றார். (ஐ)

## ஊசிமூலம்...

காணப்பட்டார்.

அவரின் சடலம் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனையில் அவர் ஊசி மூலம் ஹெரோயின் போதைப்பொருளை செலுத்தியிருந்தமை தெரிய வந்தது. இதன் காரணமாகவே மரணம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## ரூ.46 கோடி....

ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து வந்த விமானத்தில் பயணித்த பிரிட்டன் நாட்டவர், நேற்று மாலை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் 46 கிலோ குஷ் போதைப் பொருளை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதன் மதிப்பு சுமார் 46 கோடி ரூபா என்று கூறப்படுகிறது. நுகர்வோர் மத்தியில் ஒரு கிராம் குஷ் போதைப் பொருள் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்ப னையாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போரில்...

நகரில் அந்த நகர முதல்வரின் ஒத்துழைப்புடன் பிரமாண்டமான நினைவுத்தூபி ஒன்று கட்டப்பட்டுள்ளது. அவர்களுக்கு இருக்கிற சுதந்திரம் நிறைவேற்றக்கூடியதாக அமைந்திருக்கிறது. எமது மண்ணிலும் அவ்வாறான ஒரு நினைவுத் தூபியை நாங்கள் அமைக்க வேண்டும். இந்த இடத்திலே அதற்குரிய பல்வேறு விடயங்களை நாங்கள் உருவாக்க வேண்டும்.

இங்கு நிறுவப்படும் நினைவுத்தூபியில் போரில் இறந்துபோனவர்களை நினைவுகூருகின்ற வகையில் அவர்களின் பெயர்களையும் தாங்கிவரக்கூடியவாறு சில விடயங்களை நாம் செய்ய வேண்டும். அதற்கான காலம் நெருங்கி வருகிறது. தொடர்ந்து வரும் நாட்களில் நாம் அதனை செயல்படுத்துவோம். தாயகத்திலும் புலத்திலும் வாழ்கின்ற மக்களின் ஒத்துழைப்புடன் நினைவு முற்றத்தை நிச்சயமாக நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் - என்றார். (ஐ)

## காயமடைந்த...

அதிகாலை இ. போ. ச. பேருந்து பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் கொத்மலை, நாவலப்பிட்டி, கம்பளை, நுவரெலியா, பேராதனை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொத்மலை பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்கள் வீடு திரும்பியுள்ளனர். நாவலப்பிட்டி மருத்துவமனையில் 5 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கம்பளை போதனா மருத்துவமனையில் 22 பேரும், நுவரெலியா பொது மருத்துவமனையில் 15 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, பேராதனை போதனா மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனையிலும் சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர் களில் ஓரிருவரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டது.

கடந்த சனிக்கிழமை இரவு 10 மணிக்கு கதிர்காமத்திலிருந்து மகியங்கனை ஊடாக குருநாகலுக்கு பயணித்த பேருந்து நுவரெலியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.15 மணியளவில் விபத்துக்குள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிகார மோகத்தில் அரசு செயல்படுகிறது

### பிரேம்நாத் தொலவத்த சாடல்

கொழும்பு, மே 13

அரசாங்கம் தற்போது அதிகார மோகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக கள்வர்கள் என விமர்சித்த உறுப்பினர்களை விலைக்கு வாங்க முற்படுகிறது. இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இப்போதாவது புரிந்து கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியைத் தவிர ஏனைய அனைவரும் கள்வர்கள், ஊழல்வாதிகள் என்பதே அரசாங்கத்தின் தீவிர பிரசாரமாக இருந்தது. ஆனால், இன்று தாம் கூறியவற்றை மறந்து, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சபைகளிலும் ஒவ்வோர் உறுப்பினர்களுக்கும் தீர்மானம் எடுப்பதற்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கம் தற்போது அதிகார மோகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக கள்வர்கள் என விமர்சித்த உறுப்பினர்களை விலைக்கு வாங்க முற்படுகிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற அரசாங்கத்தின் மமதையை மக்கள் இல்லாமலாக்கியமைக்கு நன்றி கூற வேண்டும். அரசாங்கம் வெறும் பேச்சு மாத்திரமே என்பதை மக்கள் உணர்ந்துள்ளதால்தான் 23 இலட்சம் வாக்குகளை குறைத்துள்ளனர்.

6 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் மக்கள் அரசாங்கத்துக்கு சிறந்த பாதம் புகட்டியுள்ளனர். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது. - என்றார். (ஐ)

# இலங்கையின் ஊழல்களால் ஜப்பான் நிறுவனங்கள் பாதிப்பு

### ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

இலங்கையில் ஜப்பான் நிறுவனங்கள் ஊழலால் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் இந்தப் பிரச்னையை சமாளிக்கும் என்று நம்பிக்கை கொண்டுள்ளதாக ஜப்பான் தூதர் அகியோ இசோமாட்டா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் பாத்ஃபைண்டர் அறக்கட்டளை ஏற்பாடு செய்த விவாதத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, சில ஜப்பானிய நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றன என்று செய்திகள் வந்தன. ஜப்பானிய நிறுவனங்கள் இணக்கக் கடமைகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கின்றன. அவை ஒருபோதும் இலஞ்சம் வழங்குவதில்லை.

தேசிய மக்கள் சக்தியில் உள்ள அரசியல்வாதிகள் எந்த வகையான ஊழலிலும் ஈடுபடவில்லை என்ற ஜனாதிபதியின் கருத்துக்கு பதிலளித்த அவர்,

அரச அதிகாரிகள் மட்டத்திலும் இந்தப் பிரச்னையை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம் - என்றார். (ஐ)

## உள்ளூராட்சிகளில்...

இதன்போது, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இடம்பெற்ற முதலாவது உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. ஆட்சிக்கு வந்து 6 மாதங்களில் மக்களால் வெறுக்கப்பட்ட அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி திகழ்கிறது. பொதுத் தேர்தலில் அரசாங்கத்துக்கு 68 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. ஆனால், இந்தத் தேர்தலில் 23 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் குறைவடைந்துள்ளன. இது அரசாங்கத்துக்கு பெரும் வீழ்ச்சியாகும்.

தேர்தலில் 269 உள்ளூராட்சி மன்றங்களை வெற்றிகொண்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்தாலும் அவர்களால் 116 மன்றங்களிலேயே ஆட்சியமைக்க முடியும். 140இற்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அந்த சபைகளில் தேவையான பெரும்பான்மை இல்லை. தேர்தலில் சுயேச்சை குழுக்கள் வாக்குகளைப் பெற்று, அவர்களின் ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாத சக்தியாக அவர்கள் மாறியிருக்கும் நிலையில், அவர்களை பயன்படுத்தி அல்லது அவர்களின் ஆதரவை பெற்றுக்கொண்டு ஆட்சியமைக்க அரசாங்கம் எதிர்பார்த்திருக்கிறது.

இதற்காக அரசாங்கம் சுயேச்சைக் குழுக்களுக்கு பல்வேறு சலுகைகள் மற்றும் சன்மானங்களை வழங்க எதிர்பார்த்திருக்கிறது. குருநாகல் பண்டுகஸ்நுவர உள்ளூராட்சி மன்றத்துக்கு அரசாங்கத்துக்கு 17 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. ஆனால், எதிர்கட்சிகளுக்கு 21 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்களும் ஏனைய எதிர்க்கட்சிகளும் இணைந்து இந்த சபையில் ஆட்சியமைக்க முடியும்.

அதனால், தேசிய மக்கள் சக்தி தனித்து ஆட்சியமைக்க முடியாத அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து சபையின் தலைவர், உபதலைவர் பதவிகள் தொடர்பில் சிந்திக்காமல் கட்சி சார்பற்றவகையில் ஆட்சியமைக்க ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ஐ)

## சுற்றுலா...

தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வேலணையிலிருந்து யாழ்ப்பாண நகரம் நோக்கி வந்த பேருந்து மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல இடம் தரவில்லை என்று கூறியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தாக்குதலில் பேருந்தின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டன. இதில், இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பேருந்தின் சாரதி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# வெப்பநிலை குறித்து கவனமாக இருங்கள்

## வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு, மே 13

நாட்டின் பல பகுதிகளில் இன்றைய தினம் வெப்பநிலை கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை, மொனராகலை மாவட்டங்களின் சில பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை அதிகளவில் இருக்கும். எனவே, இது குறித்து பொதுமக்கள் அவதானமாக செயல்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, மே 13

இந்தியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஒரு கைத்துப்பாக்கி, 13 தோட்டாக்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று மாத்தறை குற்ற புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

கைதான சந்தேகநபர்கள் இருவரும் சூரியவெவ, பதுவத்த பகுதிகளை சேர்ந்த 30 மற்றும் 38 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுவத்தயில் உள்ள சந்தேக நபரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது துப்பாக்கி, தோட்டாக்களை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

# விபத்தில் இறந்தோரின் சடலங்கள் உறவினரிடம்!

நுவரெலியா, மே 13

கொத்மலை - இறம்பொடை - கெரண்டிஎல்ல பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இந்த உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அடையாளம் காணப்படாத உடல் ஒன்று கம்பளை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த 46 பேர் இன்னமும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# உள்ளூராட்சிகளில் ஆட்சியமைக்க தமிழ் கட்சிகளுடனும் பேசுகிறோம்!

## ரிஷாத் பதியுதீன் எம். பி. அறிவிப்பு

கிண்ணியா, மே 13

**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பல உள்ளூராட்சி சபைகளில் தலைமை பொறுப்பை ஏற்பதற்காக தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதாக அந்தக் கட்சியின் தலைவரும் எம். பியுமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

கிண்ணியாவில் நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சில உள்ளூராட்சி சபைகளில் பிரதி தவிசாளர்களை பெறுவதற்கும் சிலவற்றில் ஆட்சி பங்காளர்களாக இருப்பதற்கும் செயல்பட்டு வருகிறோம்.

எமது கட்சிக்கு அதிக ஆதரவு கிடைத் துள்ளது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் முன்னிலை பெற்றுள்ள சபைகளில் ஆட்சியமைக்க விரும்புகிறோம்.

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நல்ல சபைகளை உருவாக்கி அதன் மூலம் பிரதேச அபிவிருத்தியை பெற்றுக்கொடுப்போம் - என்றார். (ஐ)

# வெசாக்கை முன்னிட்டு 388 கைதிகள் விடுதலை

கொழும்பு, மே 13

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஆண்கள், பெண்கள் என 388 சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் காமினி பி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 40 பேரும் வாரியபொல சிறைச்சாலையில் இருந்து 38 பேரும் அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து 36பேரும் மஹர சிறைச்சாலையில் இருந்து 30 பேரும் மற்றையவர்கள் இதற்கு இணைந்த சிறைச்சாலைகளில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டவர்களில் நீண்டகாலமாக தண்டப்பணம் செலுத்த முடியாமல் இருந்தவர்கள். சிறைச்சாலையில் நன்னடத்தையுடன் செயல்பட்டவர்கள் என இனங்காணப்பட்ட சிறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களும் உள்ளடங்குவர் என்றும தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# டிராக்டர் மோதி இளைஞர் மரணம்

கொழும்பு, மே 13

டிராக்டர் மோட்டார் சைக்கிளை மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

பொலநறுவை - வெலிகந்தையில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

டிராக்டரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவரே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

டிராக்டரின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் 25 வயது பெண் கைதானார்

மட்டக்களப்பு, மே 13

ஐஸ் போதைப்பொருளுடன் இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வாழைச்சேனை - பிறந்துறைச்சேனையில் வைத்து 25 வயதான இந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

வீடு ஒன்றில் நடத்தப்பட்ட சோதனையிலேயே அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 5 கிராம் 670 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

குறித்த யுவதி நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதான யுவதியை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி எம்முடன் எவரும் பேசவில்லை!

## டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், மே 13

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் உத்தியோகபூர்வமாக எந்தவொரு தரப்பும் எம்முடன் பேசவில்லை என்று ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் எமது கட்சி ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய சபைகளில் முதன்மை நிலையில் உள்ளது. அதனைவிடவும் ஏனைய சபைகளிலும் எமது கட்சி தீர்மானிக்கத்தக்க ஆசனங்களை கொண்டிருக்கிறது.

உள்ளூராட்சி மன்றங்களில் நாம் எம்முடன் இணைந்து பயணிக்கக்கூடிய தரப்புகளுடன் கூட்டிணைந்து செயல்பட தயாராக உள்ளோம். எனினும், தேர்தல் நிறைவடைந்து இதுவரையில் எந்தவொரு தரப்பினரும் உத்தியோக பூர்வமாக எம்முடன் பேச்சுகளை நடத்தவில்லை. உத்தியோகப் பற்றற்ற பேச்சுக்களில் தமிழ்க் கட்சிகளும், தேசிய கட்சியும் ஈடுபடுகின்றன. எனினும், எமது கட்சிக்குள் நாம் தொடர்ச்சியாக எமக்கு விடுக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். விரைவில் நிலைப்பாட்டை அறிவிப்போம் - என்றார். (ஐ)

# நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வெசாக் தானசாலை வவுனியாவில்

வவுனியா, மே 13

வெசாக் தினமான நேற்று வவுனியாவில் நல்லி ணக்கத்தை வலியுறுத்தும் விதமாக தான சாலை அமைக்கப்பட்டது.

ஏ-9 வீதியில், வவுனியா - மூன்றுமுறிப்பு பிள்ளையார் ஆலயம் அருகாமையில் இந்த தான சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்து மதகுருமார்கள், முன்னாள் போராளிகள், தமிழ் சிவில் அமைப்புகள் மற்றும் தமிழ் மக்கள் இணைந்து இந்த தான சாலையை அமைத்தனர்.

இந்த தானசாலை மூலமாக தென்னிலங்கையிலிருந்து வடக்குக்கு வரும் மக்களுக்கு குடிபானம், உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ஐ-10)



# ஓ. ரி. பி. இலக்கத்தை எவருக்கும் வழங்காதீர்

## பொலிஸார் அறிவுறுத்து

கொழும்பு, மே 13

வெசாக் தினங்களில் இலவசமாக இணைய வசதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக போலி விளம்பரங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்படுகின்றன. இந்த போலி விளம்பரங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலவச இணைய வசதியை வழங்குவதற்கு உங்களின் ஓ. ரி. பி. இலக்கத்தை பதிவு செய்யுமாறு சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி விளம்பரங்களை நம்ப வேண்டாம். இந்த போலி விளம்பரங்களை நம்பி உங்களது ஓ. ரி. பி. இலக்கத்தை பதிவு செய்யவோ அல்லது எவருக்கும் வழங்கவோ வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.